**இலங்கை கணக்காளர் சேவையில் தரம் I இன் பதவிகளை வகிக்கும் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும்**

**<u>இலங்கை கணக்காளர் சேவையில் தரம் I இன் வெற்றிடங்களுக்கு ஏற்கனவே தரம் I இன் பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களில் இருந்து பொருத்தமான உத்தியோகத்தர்களை நியமித்தல்</u>**

11.10.2023 ஆம் திகதிய பொதுச் சேவை ஆணைக்குழுவின் 04/2023 சுற்றறிக்கையின் இடைக்கால ஏற்பாடுகளின்படி, தரம் I இன் வெற்றிடங்களுக்காக இலங்கை கணக்காளர் சேவையில் தரம் I இன் பதவியை வகிக்காத தரம் I இன் உத்தியோகத்தர்களில் இருந்து பொருத்தமான உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்து நியமிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

02. இதன்படி, தரம் I இன் பதவி வெற்றிடங்களுக்கு ஏற்கனவே , தரம் I இன் பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களால் விண்ணப்பிக்கப்படுமாயின், அதற்கான கோரிக்கைகளை பின்வரும் ஆவணங்களுடன் 2024.01.08 ஆம் திகதிக்கு முன்னதாக செயலாளர், பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, சுதந்திர சதுக்கம், கொழும்பு 07 என்ற முகவரிக்கு அனுப்புமாறு தெரிவித்துக் கொள்கிறேன்.

I. உத்தியோகத்தரின் கோரிக்கை கடிதம்
II. இடமாற்றம் பெறுவதற்கு எதிர்பார்க்கும் நிறுவனத் தலைவரின் கோரிக்கை
III. உத்தியோகத்தரை விடுவிப்பது தொடர்பான நிறுவனத் தலைவரின் பரிந்துரைகள்
IV. தற்போது வகிக்கும் தரம் I இன் பதவிக்குரிய முறையான நியமனக்கடித்த்தின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி
V. EST 12 படிவம்

03. ஏற்கனவே தரம் I இன் பதவிகளை வகிக்கும் உத்தியேகத்தர்கள் மாத்திரம் இதற்காக விண்ணப்பிக்குமாறு தெரிவித்துக் கொள்வதோடு 2024.01.08 ஆம் திகதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட மாட்டாது என தெரிவித்துக் கொள்கிறேன்.

திகதி : 2023.12.17

ஒப்பம்./ கே.டி.என்.ரஞ்சித் அசோக
செயலாளர்
பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண
சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு